தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# 'பிரகிருதி வந்தனம்' பாடிய கோவை விஞ்ஞானி

## யஜுர் வேத பாடலுக்கு அமோக வரவேற்பு

**கோவை, ஜூன் 22–**

கோவை விஞ்ஞானி பாடிய, 'பிரகிருதி வந்தனம்' என்னும், இயற்கை வழிபாட்டுப் பாடல், பல்வேறு தரப்பினர் மத்தியிலும் வரவேற்பை பெற்றுள்ளது.

கோவை இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் முதுநிலை முதன்மை விஞ்ஞானி டாக்டர் கண்ணன் வாரியர். யஜூர் வேதத்தை பயன்படுத்தி, 'பிரகிருதி வந்தனம்' என்னும், இயற்கை வழிபாட்டு பாடலை இசையமைத்து பாடினார்.

சர்வதேச மலைகளின் ஆண்டாக அறிவிக்கப்பட்ட 2002ல், கொடைக்கானலில் நடந்த ஒரு கருத்தரங்கில், அப்போதைய மத்திய அரசின் உத்தரவுபடி இந்த பாடலை, கண்ணன் வாரியர் இசையமைத்து பாடினார்.

இந்தியாவின் பல்வேறு மலைத்தொடர்களை போற்றும் வகையிலும், இயற்கை வளமும், அமைதியும் பெருக வேண்டிய வகையிலும், யஜூர் வேதத்தில் இருக்கும் பாடல் வரிகள், இதற்கென பயன்படுத்தப்பட்டன. மொத்தம் இரண்டு நிமிடம், 21 வினாடிகள் பாடப்படும் இந்த பாடலுக்கு, நட்டா, ஆனந்த பைரவி, ஹம்சத்வனி ராகங்களை கொண்டு இசையமைத்துள்ளார்.



கண்ணன் வாரியர்

இந்த பாடல், பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. 2014ல் வெளியான 'தசபுஷ்பம்' என்ற இசை ஆல்பத்திலும், இந்தாண்டு வெளியான 'லலிதம்' என்ற இசை ஆல்பத்திலும் இந்த பாடல் இடம் பெற்றுள்ளது.

பாடலை இசையமைத்து பாடிய விஞ்ஞானி கண்ணன் வாரியர், வன மரபியலில் முனைவர் பட்டம் பெற்றவர்; 226 ஆராய்ச்சிக்கட்டுரைகளை எழுதியவர். பல்லுயிர் பாதுகாப்பு குறித்த சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்காக, 'ரோலா ராவ் விருது' பெற்றவர்.

187. News in Dinamalar, Coimbatore, 22.06.2020, Prakurthi Vandanam based on Yajur Veda.